# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1991/54 - 2016 නොවැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2016.11.04

*1991/54 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு வெலிவட்டை நீர் வழங்கல் கருத்திட்டத்தில் அமைந்த நீர் மூலவளத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதால், இங்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கிறேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*“லக்திய மெதுர”,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2016, ஒற்றோபர் 27.*
*5/2/2/1179.*

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில் கடுவெலை பிரதேச செயலாளர் பிரிவில், ரக்கஹவத்தை கிராம அலுவலர் பிரிவில், ரக்கஹவத்தை எனும் ஊரில் அமைந்துள்ள திசாவத்தை அல்லது கட்டுகம்பலயாஓவிட்ட, கொடெல்லவத்தை, ரக்கஹவத்தை அல்லது திம்பிரிகஹவத்தை எனும் காணியின் மொத்த பிரமாணத்திலிருந்து 01 ஏக்கர், 01 றூட், 15.55 பேர்ச்சஸ் வரையான கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளினுள் அமைந்த காணித்துண்டு :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | களனி கங்கை ; |
| கிழக்கு | : | திரு. எஸ். வீரசிங்க மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி ; |
| தெற்கு | : | லோலெவெல் வீதி மற்றும் எல். ஜயதிலக்க மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி ; |
| மேற்கு | : | எல். ஜயதிலக்க மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி, துண்டு A 1 வீதி மற்றும் எல். இராஜபக்ஷ உரிமைகோரும் காணி |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* திரு. மஞ்சுள பளிஹேன,
இல. 97/15,
திலக்க உயன,
நுகேகொடை.

*11 - 945*



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.